### அரிய ஆளுமைகளுடன் அழுத்தமான பதிவுகள்!

# என்னை நெளிய வைத்த ஸ்டாலின்!

## லேனா தமிழ்வாணன்



**கட்சியில்** கலைஞருக்கு அடுத்தபடியான செல்வாக்குடன் இருந்த மு.க.ஸ்டாலின் அவர்களிடம், அவரது கட்சியைச் சேர்ந்த, புதுக்கோட்டையின் உயரிய பொறுப்பாளரை பற்றிய, எங்களது மனக் குறைகளை (புகார்களை) அவரிடமே சொல்லத் துணிந்ததும், அவர் வழியாக தீர்வு பெற வேண்டும் என்பதும், எனக்கு உடன்பாடான விஷயங்கள் அல்ல. இருப்பினும், இந்த மாதிரியாக ஆட்டம் போடும் ஒருவன் கொட்டத்தை அடக்க, ஒரு பத்திரிகையாளனுக்கு இல்லாத உரிமையா என்ற மனக் கேள்வியும், உறவினரின் வற்புறுத்தலும் என் செயலை நியாயப்படுத்திக் கொள்ள துணைபுரிந்தன எனலாம்.

உறவினர், பாதிக்கப்பட்டவர் என்பதால், அவர் உணர்ச்சிவசப்பட்டு ஏதேனும் ஓவராகப் பேசிவிட, 'என் விரலைக் கொண்டு என் கண்ணையே குத்திக் கொள்ள சொல்கிறீர்களா...' என்ற பாணியில் ஸ்டாலின் அவர்கள் ஏதேனும் சொல்லிவிட்டால் என்ன செய்வது, நானே மிகப் பக்குவமாக எடுத்துச் சொன்னேன். கண் கூட சிமிட்டாமல், கூர்மையாக கவனித்துக் கேட்டுக் கொண்ட ஸ்டாலின் அவர்களின் முகப்போக்கு, மாறியதை கண்டேன். அது என் மீதான பிரதிபலிப்பா, கட்சிக்காரர் மீதான கோபமா என, முதலில் என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

**ஓர் அடையாள வார்த்தையைச் சொல்லி, 'அவரா...' என்றாரே பார்க்கலாம்.**

**அவர் உதிர்த்த வார்த்தைகள், பல செய்திகளை எங்களுக்கு புரிய வைத்ததாக, நான் உணர்ந்தேன். நான் புரிந்து கொண்ட அர்த்தம் ஒன்றை மட்டும் சொல்லட்டுமா?**

**'அந்த ஆள் அப்படித்தான், தெரிந்ததுதான்! உங்களிடமும் ஆரம்பித்து விட்டாரா?' என்பதே அது. 'என்ன சாப்பிடுறீங்க?' 'ஒன்றும் வேண்டாம்...'**

**'நான் பார்த்துக்கிறேன்...' என்றார்.**

என் உறவினருக்கு ஒரு வகையில் ஆறுதல் என்றாலும், ஸ்டாலின் அவர்கள் உடனே போனை எடுத்து, அந்தத் திருகுதாள மனிதரை லைனில் பிடித்து, ஒரு வாங்கு வாங்கவில்லையே, கையோடு விசாரிக்க வில்லையே என்ற ஏமாற்றம் இருந்தது.

விடைபெற்று வெளியே வந்ததும், என் ஊகம் சரியெனும் விதமாக, 'கையோடு நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்த்தேன்...' என்றார், உறவினர் என்னிடம்.

'அப்படி இல்லைங்க. கலைஞரே கட்சிக்கு எதிராகவும், தனக்கு எதிராகவும் நடந்தவர்களையும், பொது வாழ்வில் கறைகளை சேர்த்துக் கொண்டவர்களையும் மிகக் கவனத்துடன் கையாண்டிருக்கிறார். 'ஒரு சம்பவத்திற்காக, கட்சியின் முக்கியப் பிரமுகர்களை ஏனோ தானோ எனக் கையாள முடியாது. நம்மை வைத்துக் கொண்டே விசாரிப்பதும், கண்டிப்பதும் நன்றாக இராது. பக்குவப்பட்ட தலைவர்களின் அணுகுமுறை, நீங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு இராது.

'நடந்தவை உண்மை தானா, பொய்யா, புனைந்துரையா, மிகைப்படுத்தலா என, வேறு, 'சோர்ஸ்' மூலம் விசாரிப்பார் போல! மேலும், அவரே போன் போட்டு பேசுமளவு அந்த கட்சிக்காரருக்குத் தரமோ, தகுதியோ இல்லாமல் இருக்கலாம். மாவட்ட அளவில் பெரிய பொறுப்பில் இருப்பவர் வழியே எச்சரிக்கை மணி அடிக்கப்படலாம்.

'பொறுமையாக இருங்கள்.

ஒன்று மட்டும் உறுதி. "நாளை முதல் புதுக்கோட்டைக்காரர் அடக்கி வாசிப்பார் அல்லது அவர் அடக்கி வைக்கப்படுவார், பார்த்துக் கொண்டே இருங்கள்..." என்றேன்.

"சரியான சப்பைக் கட்டு இது" என்பது போல், என்னைப் பார்த்த அந்த உறவினர், 'என்னையும் நீங்கள் கொஞ்சம் பேச விட்டிருக்கலாம்...' என்றார். இதற்கு நான், குரலற்றவனாகிப் போனேன். வெகு நாள் ஆகியும் என் உறவினர் இந்த விஷயம் பற்றி என்னிடம் பேசாததால், பிரச்சினை அடங்கிப் போனதாகவே உணர்ந்தேன். "என்ன ஆச்சு! ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டாமா?' என, உறவினரை நான் கேட்டிருக்க வேண்டும். செய்தேனில்லை!

**நமது முதல்வரிடம் உள்ள நல்ல பழக்கம், நல்லது, கெட்டதுகளில் எவ்வளவு பரபரப்பிலும் தவறாமல் கலந்து கொள்வது. இதில் அவர் அளவு கடந்த நம்பிக்கை கொண்டவராக இருக்கிறார். என்பதாகவே, நான் உணர்ந்திருக்கிறேன். இதில் தரக்கூடிய மகிழ்ச்சியை, மனநிறைவை, ஆறுதலை வேறு எதிலும் தந்து விட முடியாது என்பது, என் கருத்து. இந்த அவரது பண்பு, பாராட்டப்பட வேண்டியது.**

**எவ்வளவு பரபரப்பிலும், பணிச்சுமையிலும் மின்னல் வேகத்தில் நுழைவார். மூன்றே நிமிடங்கள் தான். அதற்கு மேல் தங்க மாட்டார். புறப்பட்டு விடுவார். முன்வரிசை அமரல், உணவு உண்ணல் என, எவையும் கிடையாது. விசேஷ வீடுகளுக்குச் செல்லும் போது, அவர் கொடுக்கும் பூங்கொத்து, ரோஜாக்களால் ஆனதாகவே இருக்கும். வேறு பூக்கள் இரா. இலை குழையெல்லாம் அதில் இராது. 2,000, 3,000 ரூபாய் மதிப்பு உடையதாக அப்பூங்கொத்து இருக்கும். வாங்கிக் கொள்பவர்களின் கை கனக்கும். மிகச் சிக்கனமாகவே பேசுவார். ஓரிரு வாக்கியங்களுக்கு மேல் இராது.**

என் மகன் வரவேற்பு, என் தம்பி மகன் வரவேற்பு, தங்கை மகன் வரவேற்பு, என் மணி விழா என, எல்லாவற்றுக்கும் வந்துள்ளார்.

இவற்றுள் ஒன்றிரண்டிற்கு நான் அழைக்கப் போகையில், அவர் வீட்டிலேயே இல்லை. நேரில் போய் பத்திரிகை கொடுத்து அழைக்கும் போது, அவர் இல்லாவிட்டாலும், சந்தித்து சின்சியராக அழைத்தால் எப்படி முக்கியத்துவம் தருவாரோ, அதே போல் எடுத்துக் கொண்டு, நிகழ்வில் கலந்து கொள்வார். "சொல்லிவிட்டு வந்தீர்களா; நேரம் குறித்துக் கொண்டு வந்தீர்களா; என் கையில் கொடுத்தீர்களா; போஸ்ட்மேன் போல, 'டெலிவரி' செய்தால் போதுமா,

நான் வந்து விடுவதற்கு; நான் என்ன அவ்வளவு இளக்காரமா?' என்ற கேள்விகள் அற்ற, அவரது பண்பு கண்டு, நான் வியந்தது உண்டு.

இவற்றினூடே என் மணி விழாவிற்கு வந்து, என் கைகளைப் பிடித்துக் கொண்டு, அவர் சொன்னது என்னை வெட்கம் கொள்ளச் செய்து விட்டது; கொஞ்சம் நெளியவும் செய்தேன்.

தொடரும்.

நன்றி :
**'தினமலர்'**
வாரமலர்
மார்ச் 16, 2025



திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலக கூட்ட அரங்கில் 2025–26 நிதிநிலை திட்ட அறிக்கைக்கான ஆலோசனைக் கூட்டம் மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், துணை ஆணையாளர் சுந்தரராஜ், நிதி குழு தலைவர் கு.கோமதி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

### இலங்கைக் கடற்படையினரால் – தொடர்ந்து

# மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுத்திட வலுவான தூதரக நடவடிக்கை எடுத்திடுவீர்!

### ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு –முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதத்தில் வலியுறுத்தல்!

**சென்னை, மார்ச் 20-**

**இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுத்திட வலுவான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

இராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 3 மீனவர்களை 18.03.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து இதுபோன்று கைது செய்யப்படுவதைத் தடுத்திட வலுவான தூதரக நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தியும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (18.03. 2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், 2025 ஆம் ஆண்டின் மூன்று மாதங்களுக்குள் இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படும் பத்தாவது சம்பவத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ள முதலமைச்சர் அவர்கள், இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 17.03.2025 அன்று மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்களை, அவர்களது மீன்பிடி விசைப்படகுடன் 18.03.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளதை வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் நமது மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்க வலுவான தூதரக முயற்சிகள் தேவை என்று பலமுறை தான் வலியுறுத்திக் கேட்டுக் கொண்ட போதிலும், இது போன்ற கவலையளிக்கக்கூடிய சம்பவங்களின் எண்ணிக்கை தொய்வின்றி தொடர்ந்து அதிகரித்து வருவதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு மீன்பிடித் தொழிலையே பெரிதும் நம்பியுள்ளதையும், இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி இதுபோன்று சிறைபிடிக்கப்படுவதால், அவர்களது குடும்பத்தினர் வறுமையின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் தனது கடிதத்தில் வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமிழ்நாட்டு மீனவர்கள் மேலும் கைது செய்யப்படாமல் தடுக்கவும், இலங்கை சிறைக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 110 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க வலுவான தூதரக முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கும்பகோணத்தில் துக்காச்சி

# ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்கு யுனெஸ்கோ விருது!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

**சென்னை, மார்ச் 20-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (18.03.2025) வினா - விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எச். ஜவாஹிருல்லா ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.**

**க.அன்பழகன்:** கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், மானம்பாடி, நாகநாதசுவாமி திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** உறுப்பினர் கோரிய திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த வேண்டுமென ஏற்கனவே நிதி அமைச்சர் அவர்களும், உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்களும் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இந்த திருக்கோயி லானது ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோ யில் என்பதால் பணிகள் மே ற்கொள்ளவதற்கு அனைத்து மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டுள்ளன. ரூ.51 லட்சம் மதிப்பீட்டில் திருப்பணி மேற்கொள்ள வருகின்ற 11.04. 2025 அன்று பணிகள் தொடங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**க.அன்பழகன் :** நான் முதலில் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் கோயில் நகரமான ஆன்மீக மக்களின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசு வந்ததற்கு பிறகு சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்டு பல்வேறு கோயில்களில் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் மேலும் ஒரு பணியாக இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மானம்பாடி நாகநாதசுவாமி திருக்கோயில் கும்பகோணம் -சென்னை சாலையில் 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. கங்கை கொண்ட சோழபுரம், பிரகதீஸ்வரர் திருக்கோயில் கட்டப்பட்ட காலத்தில் இத்திருக்கோயிலும் முதலாம் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் கட்டப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்து இருக்கிறது, இந்த திருக்கோயில் மூன்று துறைகளின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு இன்றும் திருப்பணி நடைபெறாமல் உள்ளது. திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் மூலம் சோழனின் வரலாற்று பெருமைகளை அறிந்து கொள்ள முடிகிறது. இத்திருக்கோயிலின் வெளிச் சுற்றில் கருங்கல்லாலான நடராஜர், தட்சிணாமூர்த்தி நந்தி ஆகிய சிற்பங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது சோழர்களின் கட்டிடக்கலையும் சிற்பக் கலையும் பறைசாற்றுகின்ற இந்த திருக்கோயி லை நிதி அமைச்சர் அவர்களும், உயர் கல்வித் துறை அமைச்சர் பார்வையிட்டு இருக்கிறார்கள். அந்த வகையில் அறநிலையத்துறை அமைச்சர் உடனடியாக இந்த ஆண்டு திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கூடுதல் நிதி!**

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** நான் முதலிலேயே கூறுகின்ற போதே தெளிவாக பதிலை சொன்னேன். 11.4.2025 அன்று அந்த திருக்கோயிலுக்கு ரூ.51 லட்சம் செலவில் பணிகள் தொடங்கப்படும் என்று கூறியிருந்தேன். இதை ஒரு பதிவாக பதிவு செய்ய கடமைப்பட்டு இருக்கின்றேன். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் முதல்வர் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோ யில்களுக்கு அரசு சார்பில் நிதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று 2022 -2023 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி, 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி, 2024-2025 100 கோடி என்று ரூ.300 கோடியை 1,000 ஆண்டுகளுக்கு முன்பு நம் முன்னோர்க ளால் கட்டப்பட்டு போற்றி பாதுகாக்கப்பட்ட பொக்கிஷமான திருக்கோயில்களை பாதுகாக்க வேண்டும் என்று நிதியை வழங்கியுள்ளார். அந்த வகையில் ரூ.300 கோடியோடு உபயதாரர் நிதி ரூ.60 கோடி மற்றும் திருக்கோயில் நிதி ரூ.70 கோடி என சேர்த்து ரூ.430 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகள் வாயிலாக இதுவரையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட 49 திருக்கோயி ல்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது என்பதை இந்த மன்றத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த ஆட்சியின் நீட்சியாக இந்த ஆண்டும் கூடுதலாக நிதியினை வழங்க முதல்வர் ஒப்புதல் தந்திருக்கின்றார்.

ஒட்டுமொத்தமாக 507 திருக்கோயில்களை ஆவணப்படுத்தி இருக்கின்றோம். தமிழக முதல்வர் தலைமையிலான ஆட்சி இருக்கின்ற போதே இந்த அனைத்து திருக்கோயி ல்களுக்கும் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை அறுதியிட்டு உறுதியாக சொல்லிக் கொள்கிறேன். அந்த வகையில் உறுப்பினர் கோரிய அனைத்து பணிகளையும் நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும்.

**க.அன்பழகன்:** இராஜராஜ சோழன் மறைந்ததற்கு பிறகு ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அவரை புகழ்ந்து பேசப்படுகிறது. அது போன்று முதலமைச்சர் அவர்களை இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கழித்தும் இந்த ஆன்மீக மக்களும், நாட்டு மக்களும் பாராட்டுவார்கள், போற்றுவார்கள் என்பதை குறிப்பிட்டு சொல்கிறேன். கும்பகோணம் காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு புதிதாக தேர் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதையும், கும்பகோணம் கொட்டையூரில் கோடீஸ்வரர் சுவாமி திருக்கோயி லுக்கு கடந்த ஐந்து ஆண்டு காலமாக திருத்தேர் செய்ய பணி நடைபெற்று முடிவு றாமல் இருக்கிறது. மேலும், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பழமையான நூற்றுக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் உள்ளன. திருக்கோயில்களில் வழிபாடு இல்லாமல் பின்னமான கல் சிலைகள், பழமையான சக்கரங்கள், தேர் சட்டங்கள், தேர் அச்சுகள் என பல சிதறி கிடக்கி ன்றன. நூறாண்டுகளுக்கு மேற்பட்டி ருக்கிற இந்த பழமையான பொருட்களை இந்து சமய அறநிலையத்துறை மூலமாக அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு அதை மக்களுடைய பார்வைக்கு அமைப்பார்களா என்பதனையும் கும்பகோணத்தை சுற்றியுள்ள திருக்கோயில்களை தரிசனம் செய்த இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் மற்றும் வெளிநாடுகளில் இருந்து அதிக அளவில் வருகை தருகின்ற சேவார்த்திகளுக்கு ஒவ்வொரு திருக்கோயிலின் வரலாறு, பண்பாடு மற்றும் கலை அம்சங்கள் விளக்கிட இந்து சமய அறநிலையத்துறை உடைய சார்பாக வழிகாட்டு மையம் அமைத்து வழிகாட்டிகளை நியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**திருத்தேர் – ராஜகோபுரப் பணிகள்!**

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: இந்த மன்றத்தில் தஞ்சாவூர், மயிலாடுதுறை போன்ற மாவட்டங்களில் நடைபெறுகின்ற திருப்பணிகளை குறித்து பதிவு செய்ய விரும்புகிறேன். யுனெஸ்கோ என்ற நிறுவனம் ஆண்டாண்டு காலமாக கலை மற்றும் அறிவியல் சார்ந்து ஒரு ஆய்வினை மேற்கொள்வார்கள். அந்த வகையில் இந்த ஆண்டு மேற்கொண்ட வகையில் யுனெஸ்கோ விருது நம்முடைய கும்பகோணத்தில் இருக்கின்ற துக்காச்சி ஆபத்சகாயே ஸ்வரர் திருக்கோயிலுக்கு இந்த ஆண்டிற்கான யுனெஸ்கோ விருது வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை மகிழ்ச்சியான செய்தியாக இந்த மன்றத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன். அதோடு மட்டுமல்லாமல் தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தின் கட்டு ப்பாட்டில் 88 திருக்கோயில்கள் இருக்கின்றன. அதில் புன்னைநல்லூர் மாரியம்மன் திருக்கோயில் போன்ற ஓரிரு திருக்கோயில்களில் தான் நிரந்தர வருமானம் இருக்கும். மற்ற 80-க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் தீபம் ஏற்றுவதற்குண்டான சூழல் கூட இல்லாததை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் 2022-2023 ஆம் நிதியாண்டில் முதன்முதலாக 3 கோடி ரூபாயை அரசின்மானியமாக வழங்கிய முதல்வர் நம்முடைய முதல்வர். அதேபோல் 2023-2024 ஆம் நிதியா ண்டில் ரூ.3 கோடி உயர்த்தி , 2024-2025 ஆம் நிதியாண்டில் கூடுதலாக ரூ.6 கோடியை வழங்கி ஆகமொத்தம் ரூ.12 கோடியை அரசு மானியமாக வழங்கி, இருளில் சூழ்ந்த தெய்வங்களுக்கு விளக்கு வெளிச்சத்தில் மகிழ்ச்சியாக தெய்வங்கள் கூட இருக்கின்ற ஒரு ஆட்சி இந்த ஆட்சி என்பதை பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன். உறுப்பினர் கோரிய திருத்தேர் மற்றும் இராஜகோபுர பணிகள் மேற்கொள்ளப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டி தரப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் மரத்தேர் அந்த திருக்கோயிலுக்கு உறுதியாக ஏற்படுத்தி தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்

**சுவாமிமலை கோயிலில் மின் தூக்கி!**

எம்.எச்.ஜவாஹிருல்லா: தஞ்சாவூர் பகுதியில் நடைபெற்று வரக்கூடிய திருக்கோயில்களின் பணிகளை குறித்து அமைச்சர் விவரித்தார்கள். இந்த பேரவையில் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய முருகப்பெருமானின் நான்காம் படைவீடான சுவாமிமலை கோயிலுக்கு மின் தூக்கி வசதியை செய்து தரப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை வைத்தேன். முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் அந்தக் கோரிக்கையை ஏற்று பணிகள் நடைபெற்று வருகிறது. அந்தப் பணிகள் எப்போது நிறைவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதை கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** எல்லோருக்கும் எல்லாம் என்ற இந்த அரசினுடைய கொள்கையின்படி இந்து கோயில்களுக்கு உறுப்பினர் இஸ்லாமிய நண்பர் திருக்கோயிலுக்கு மின்தூக்கி கேட்டவுடன் முதலமைச்சர் ஒப்புதல் அளித்து ரூ.3 கோடி 55 லட்சம் செலவில் அந்த பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. வரும் ஜூன் மாத இறுதிக்குள் அந்த பணிகள் முடிக்கப்பெற்று நானும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் இணைந்து அந்த மின்தூக்கியை மக்கள் பயன்பாட்டிற்கு வரும் ஜூன் மாதத்திற்குள் கொண்டு வருவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### மாவட்டப் பொறுப்பாளர் டி.பழனிவேல் தலைமையில்

# தஞ்சை தெற்கு மாவட்டப் பொறியாளர் அணி ஒன்றிய - நகர - பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

### மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

தஞ்சாவூர் தெற்கு மாவட்டப் பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் மாவட்டப் பொறுப்பாளர் டி.பழனிவேல் தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு தஞ்சாவூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : (22.03.2025 - சனிக்கிழமை) நேரம் : காலை 10.00 மணிக்கு

இடம் : தஞ்சை தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், சீனிவாசபுரம், காசாங்குளம், பட்டுக்கோட்டை.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி.